# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0607/ஊராட்சி/2018

ஆணை எண்: 127/2018

நாள்: 23/05/2018

T. ராஜா,
1/233, பாரதி நகர், கோவில்பாளையம்,
கிணத்துகடவு வட்டம் – 642 110. – **முறையீட்டு மனுதாரர்**

வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பிறர்,
மதுக்கரை ஊராட்சி ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம். – **எதிர் மனுதாரர்கள்**

## ஆணை

கிணத்துக்கடவு வட்டம், கோவில் பாளையம் கிராமத்தில் வசிக்கும் திரு. T. ராஜா, அவர்களின் 11.5.2018 நாளிட்ட மனுவில் கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சீரபாளையம் மற்றும் மயிலேரிபாளையம் ஊராட்சிகளில் பொது நிதிகளை முறைகேடாக ஊராட்சி செயலாளர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தனி அலுவலர் கூட்டணியால் எடுக்கப்பட்டுள்ளதை ஆவண ஆதாரங்களுடன் 15.11.2015 மற்றும் 11.2.2018 நாளிட்ட புகார் மனுக்கள் மூலம் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், புகாரின் பேரில் 19.1.2018 அன்று கோயம்புத்தூர் ஊரக வளர்ச்சி இயக்குனர் (தணிக்கை) அவர்கள் முன்னிலையில், மதுக்கரை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விசாரணை நடந்தது என்றும், மேற்படி விசாரணையில் கலந்து கொண்ட அலுவலர்களை பெயரளவிற்கு ஆஜராகி அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளார்கள் எனவும், விசாரணையின் போது அவர் வழங்கிய ஆவண

ஆதாரங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமலும் விசாரண அறிக்கையினை உயர் அலுவலர்களுக்கு அனுப்பாமலும், புகார்தாருக்கு தெரிவிக்காமலும் ஒன்றிய அலுவலர்கள் செயல்படுகின்றனர் எனவும் தெரிவித்து, புகாரில் தெரிவித்துள்ள புகார்களை விசாரித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 24.5.18

24.5.18

பெறுநர்

T. ராஜா,
1/233, பாரதி நகர், கோரிப்பாளையம்,
கிணத்துகட்டி வட்டம் – 642 110.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர். (இணைப்புகளுடன்)
2. நேர்முக உதவியாளர் (மு.ம.ந.)
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)